# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 41வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் - 2026
## பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கம்

**பேராசிரியர் அழகையா துரைராசா** தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு கல்வியாண்டுகள் 2021/2022, 2022/2023 மற்றும் 2023/2024 இல் பட்டம் பெற்று முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியெய்தி, எதிர்வரும் 40வது பொதுப் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் அளிக்கப்படவிருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடம், வியாபாரக் கற்கைகள் பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த மேற்படி கல்வியாண்டுகளில் தமது கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளும் இத் தங்கப்பதக்கத்திற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கமுடியும்.

- **விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் ஒரு முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.**
  1. சிரேஸ்ட உதவிப்பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
  2. பிரதிப் பதிவாளர், பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள் கிளை,வவுனியாப் பல்கலைக்கழகம், வவுனியா.
  3. பல்கலைக்கழக இணையத்தளம்: **www.jfn.ac.lk**

- **விருதுகள்:-**
  - பல்கலைக்கழக மட்டத்தில் சகலதுறைகளிலும் சிறப்பாக செயற்பட்டமைக்காக ஒரு பதக்கம்.
  - பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக ஒவ்வொரு பீடத்திற்கும் ஒவ்வொரு பதக்கம்.

- **விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தல்**

  பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும், ஏனைய சான்றிதழ்களுடன் **"சிரேஸ்ட உதவிப்பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்"** என்னும் முகவரிக்கு 23.09.2026ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பக் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் **"பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப் பதக்கத்திற்கான விண்ணப்பப் படிவம்"** எனக் குறிப்பிடவும்.

- **முடிவுத் திகதி : 23.09.2026 (புதன்கிழமை)**
- **முக்கிய குறிப்பு :**
  - ஏற்கனவே 2026ம் ஆண்டு மாசி மாதம் 19ம் ,20ம் , 21ம் மற்றும் 22ம் திகதிகளில் நடைபெற்ற 40ஆவது பட்டமளிப்பு விழாவின் போது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவை இல்லை.
  - சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காதவையும், தெளிவற்றவையும், பூரணப்படுத்தப்படாதவையும் மற்றும் முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுபவையுமான விண்ணப்பங்கள் யாவும் கருத்திற் கொள்ளப்படமாட்டா.

**பதிவாளர்**

- ஏற்கனவே 19ம்,20ம்,மற்றும் 21ம் திகதி ஆடி மாதம் 2023இல் நடைபெற்ற 37ஆவது பட்டமளிப்பு விழாவின் போது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவை இல்லை.